ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2328/19 - 2023 අප්‍රේල් මස 21 වැනි සිකුරාදා - 2023.04.21

*2328/19 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 5/2005.*

**2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டம்**

8 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம்,

(1) 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதிய 2259/ 11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் ஆக்கப்பட்டு வெளியிடப்பட்ட பந்தி 3 இன் 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, மத்தியஸ்த (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில், “ஐந்து இலட்சம் ரூபாவுக்கு (ரூபா 500,000.00) குறைவானதாக இருத்தல் வேண்டுமென்பதனைக்” என்னும் சொற்களையும் இலக்கங்களையும் நீக்கிவிட்டு “ஒரு மில்லியன் ரூபாவாக (ரூபா 1,000,000.00) அல்லது ஒரு மில்லியன் ரூபாவுக்கு (ரூபா 1,000,000.00) குறைவானதாக இருத்தல் வேண்டுமென்பதனைக்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் திருத்துகின்றேன் ; அத்துடன்

(2) மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தமானியின் கீழ் முன்பு ஆரம்பிக்கப்பட்டுள்ள மத்தியஸ்தங்கள் மற்றும் அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கம் ஏற்படுத்துதலாகாது என இக்கட்டளை மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

**கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ,**
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2023, ஏப்பிறல் 19.*

EOG *04-0140*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*